



ஓலை 106| ஓசை 229| சனவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

## பொருள்

அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஔவை மொழியில் அமுதப் பாக்கள்

பாவகை : எண்சீர் மண்டிலம்

## கேட்டில் உறுதி கூட்டும் உடைமை!



கார்மேகம் மழைச்செல்வம் தன்னை மண்ணில்
கரையவிட்டும் உறுதியுடன் மீண்டும் கூட்டிக்
கார்மேகம் உடைமையாக்கும்; பகல்முழுக்கக்
கதிரவனும் ஒளிச்செல்வம் இழந்த போதும்,
பார்செழிக்க உடைமையாக்கி வழங்கும் நாளும்;
பாங்குடனே வெண்ணிலவும் ஒளியாம் செல்வம்
கா(ர்)யிருட்டை யோட்டிமீண்டும் உடைமை யாக்கும்;
கனிந்துவைப்போல் கேட்டினிலும் உடைமை சேர்ப்பாய்!

உருக்குலைந்தே ஒருநாளில் மறைந்தே கேட்டில்
ஒளிராமல் போனபோதும் நிலவும் மீண்டும்
வருவாயாய் ஒளிச்செல்வம் உழைத்தே ஈட்டும்
வகையறிந்தும் மாந்தருமே கேடு யென்றே
பொருளினையும் உழைத்தேதான் பாடு பட்டுப்
போனதையும் கூட்டுகிற திறனைப் பெற்று,
திருவாக வாழ்ந்திடவே முயல வேண்டும்;
திசைதோறும் தன்புகழை நாட்டல் வேண்டும்!




கோடையிலே இலையுடைமை மரமி ழந்தும்
கொழுந்துவிட்டு வேனிலிலே உடைமை யாக்கும்;
ஓடையது ஓடிநீரும் செலவ ழித்தும்,
உழைத்துடைமை நீரையுமே கேட்டில் கூட
தாடையிலே கைவைத்துக் கலங்கி டாமல்
தன்னுடைமை கூட்டிடாமல் விட்ட தில்லை;
ஆடையைப்போல் உடைமையெலாம் களைந்தும்
அகவுறுதி ஏற்றுடைமை கூட்டு மாந்தா!

**இலக்கணக் குறிப்பு:**

மண்டிலப் பாக்களில் ஒன்று எண்சீர் மண்டிலமாகும். அரையடியான வரி தோறும் காய்+ காய் + புளிமா+ தேமா ஆகிய சீர்கள் வரும் நான்கடிகள் கொண்டது ஒரு பாடல் நான்கடியும் ஓரெதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமையும். 2, 4, 6, 8 ஆகிய வரிகள் அடியின் தொடர்ச்சி என்பதை உணர்த்த மடக்கி உள்ளேதள்ளி எழுதவேண்டும். எட்டு வரிகள் கொண்டவை ஒரு பாட்டாகும்.

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

# கருணை

பாவகை : நிலை மண்டில ஆசிரியப்பா

பசித்தவர் முகத்தைப் பார்க்கக் கூசியே
நசித்திடும் பிணியை நில்லா தோட்டவே
அசித்திட உணவினை அருளுடன் வழங்கிட
கசிந்தே நெஞ்சிலே கடமையாய் நினைந்திட
நசிவை நீக்கியே நயன்மையை அடைந்திட
மசிந்தே நாளும் மாண்புடன் நடந்திட
வசியம் செய்திட வசைதல் நீங்குமே.
கசிவை நீக்கியே களிப்பை நல்குமே.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

வசனங்கள், துணுக்குகள், கருத்துகள், நீதி போதனைகள், எழுச்சி கோஷங்கள் ஆகியவற்றின் வரிகளை ஒடித்து, வார்த்தைகளை ஒன்றுக்குக் கீழே ஒன்றாக எழுதி, இடையிடையே மூணு புள்ளிகள், ஆச்சரியக் குறிகள் போட்டால் அது கவிதை என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிற ஏராளமான பேர்கள் இருக்கின்றனர். இவர்கள் சிறிதும் கூச்ச நாச்சமே இன்றி தங்கள் பெயருக்கு முன்னால் கவிஞர் பட்டத்தைப் பெருமையாக சேர்த்துக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். அவர்களது அந்த வார்த்தை அடுக்குகளைக் கவிதை என்று வெளியிடக் கூடிய இணைய, அச்சு இதழ்களும் ஏராளமாக உள்ளன.


--ஷாராஜ்

கற்றது கடுகளவு
கவிஞராவது வானளவு
கவிதைக்கு அழகு
கவிதையாய் வாழ்தல்



கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

சிறப்பு தரிசனம்
கட்டணமின்றி கடவுளின்காட்சி
வீட்டு பூஜையறை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

3. காந்தருவ தத்தையார் இலம்பகம்.

சீதத்தன் தந்தை யவதத்தன் வணிகன்.
வித்தகன், நகரில் புகழ் பெற்றவன்
சுத்த வீரன் போருக்கு அஞ்சாதவன் .
பதுமையை மணமுடித்தான் மகனுக்கு

புது வாழ்க்கை புது மாப்பிள்ளை சீதத்தன்
பதுமை இல்லாளோடு இன்புற்றிருக்க
போதாத நேரம் மரக்கலங்கள் நீரில் மூழ்கின
வாராது வந்த துன்பத்தில் மூழ்கினான்

எஞ்சியுள்ள மரக்கலத்தில் மனம் தளராமல்
இஞ்சியுள்ள பொருள்கள் அனைத்தும் ஏற்றினான்
பஞ்சுபோல் கடலில் மிதந்து சென்றது
அஞ்சுவது இல்லாமல் துணிந்து பயணித்தான்

வணிகம் சிறக்க ஒரு தீவை அடைந்தான்
பணிஆட்கள் ஆக்கப் பூர்வமாக உழைத்தனர் .
மணிகள், பவழம், வைரம் நல்லவிலைபோக
துணிந்து பொருள் ஈட்டி செல்வந்தனானான்.



தீவின் வேந்தன் இவனை வரவேற்றான்
மீதி இல்லாமல் இருவரும் நண்பராயினர்
சில திங்கள்கள் மகிழ்ந்து இருந்தான்
நலமாக செல்வதுடன் ஊருக்ககுப் பயணம்

வெள்ளிமலை வேந்தன்கலுழவேகன்கவலை
செல்ல மகள் காந்தருவ தத்தைக்கு வரன்
அல்லும் பகலும் அதே நினைப்பு
நல்ல இராசகுமாரன் மகளுக்கு அமையனும்

சாதகத்தை கொடுத்து சோதிடம் கேட்டான்
பாதகமே இல்லாமல் நல்லதே கூறினான்
நாதனோடு இராசமாபுரத்தில் மணமுடிப்பாள்
வாதகமின்றி இறை அருளோடு நடைபெறும்
(நாதன் : தலைவன், வாதகம் : இடையூறு)

அத்திருமணத்தை நடத்த விழைந்தான்
இத்திருமணத்தை முடிக்க வழி அறிந்தான்
பத்திரமாக மகளுடன் இராசமாபுரம் வந்தான்
பெத்த வணிகன் சீதத்தன் தான் ஒரேவழி

அவன் மரக்கலங்களுடன் கடலிடை இருந்தான்
நண்பன் தரனிடம் உள்ளதைக் கூறினான்
''சீதத்தன் எங்ககிருந்தாலும் அழைத்து வா''
தரன் மந்திரம் தந்திரம் தெரிந்தவன்
(வித்தியாதரன் : தரன்)

தொடரும்...

கவிஞர் ந. திருக்காழு

# அர்த்தம்

தூக்கம் பிடிக்காத நான்
இரவெல்லாம்
நாய்கள் குரைப்பதைக்
கேட்டுக் கொண்டிருந்தேன்.
குரைத்தல் கற்றிட
போதுமானதாகவே
இருக்கிறது ஓரிரவு.
இருந்தும் குரைத்தலின்
அர்த்தமறிய வேண்டுமெனில்
நாயாக வேண்டும் நான்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பெரியாரை பிழையாமை

அதிகாரம் : 90

ஆக்கஞ்செய்ய வல்லாரை
இகழாதிருத்தல் காப்போர்.
தன்னை தீங்கிற்குகாக்கும்
காவல்களுக்கெல்லாம் மேலானதாம்.

ஆற்றலுடைய பெரியாரை
மதிக்காதிருந்திடில் அஃதவர்க்கு.
எவ்விடத்தும் நீங்கா
துன்பங்களைத் தந்திடுமாம்.

தான்கெடவிரும்பின் ஒருவன்
பெரியார்சொல் கேளாதிருத்தலும்.
தற்கொலைவிரும்பின் வலியவர்க்கு
குற்றமிளைத்தலுமே போதுமானதாம்.



பெரியாரை பிழையாமை

வலியோர்க்கு எளியோர்
தீங்கிழைத்த லென்பது.
கூற்றுவனை கைகாட்டி
தானேயழைத்தலுக் கொப்பாம்.

மிகுவலியுடைய மன்னனின்
கொடும்பகைக்கு உள்ளானோன்.
எங்கேயோடித் தப்பிடினும்
உயிர்வாழ்தல் இயலாதாம்.

தீயிற்கருகியதில் ஒருகால்
உயிர் பிழைத்திடினும்.
பெரியாரிடத்துத் தவறுவோர்
தப்பிப்பிழைக்க வியலாதாம்.

தகுதியாற்சிறப்புடைப் பெரியார்
ஒருவனை வெகுண்டாலவன்.
வாழ்வோடு சிறப்புங்கூடவே
பொருளும் அழிந்துபோம்.

தவநெறியா லுயர்ந்தோர்
கெடல்நலமென நினைந்திடின்.
உலகில் நிலைபெற்றோராய்
உள்ளோரும் குடியழிந்துபடுவர்.

விரத வாழ்க்கைகொண்டோர்
ஒருவரை சினங்கொள்வராயின்.
பெருஞ்சார்புடையராயினு மவர்
உய்யாது அழிந்துபடுவர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# அமைதி இழந்தது

தீயோர் அடி வருடும்
கொடுங்குன்று மீளி.
தினவு விழை அரம்பர்
முடி தொழும் விறலி.
தமிழால் பிழைத்த திரள்
தமிழருக்கு எதிராய் சூழ.
தென்கடல் அமைதி இழந்தது.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# தன்முனைக் கவிதைகள்



தொடரும் காத்திருப்பு
அன்பினை வாசிக்கிறது
அவசரம் என்றுமே
வாழ்வுக்கு உகந்ததன்று

கடந்துபோகும் நாட்கள்
திரும்பாமலே போகும்
சூரியனைக் கண்டதும்
மறைகிறது பனித்துளி

அழும் குழந்தை
விடாது அடம்பிடிக்கிறது
வேகமாகன பேரூந்தில்
இறுக்கிப்பிடிக்கும் கைகள்

அதிகாலைச் சேவல்
அலாரம் அடிக்கிறது
பிறந்த குழந்தையின்
இடைவிட்ட விழிப்பு

தாய்சேய் உறவு
உயிரோடு யுத்தம்
மரணித்துப் போனதும்
ஊருக்கே உணவுத்திட்டம்

பொய்யும் புரட்டும்
அந்தநேர இன்பம்
தொடர்ந்து சென்றிட
பெயருக்கே பேரழிவு

தாயின் அருமை
இளமையில் தெரியவில்லை
தாயாகும் போதுதான்
மனதினில் வலிக்கும்

இரத்த பந்தம்
இழப்பினில் துடிக்கிறது
ஒன்றாய் வாழும்போது
அருமை புரிவதில்லை

அதிகாலைப் பொழுது
அருள்களின் வாசல்
அதிகமான மக்கள்
அறியாமல் துயிலில்

கவிஞர் சேஹு மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# ஏழ்மையின் அணிகலாம் சிரிப்பு

மனிதம் வளர
மனங்கள் சிறக்கணும்.

இன்று நாளை
என்றும் உயரணும்.

ஆண்டான் அடிமை
ஆள்பவர் ஆளப்படுபவர்.

எல்லோருக்குமே ஒரு
புன்னகை உயிராகும்.

சிரிப்பு என்பது
ஏழைக்கு அணிகலன்.

தங்கம் வாங்க
தங்கிடாத செல்வத்தால்.



குறுநகை ஒன்றே
பெருநகை மாலையாகுமே.

அன்பை கொட்டி
அளவில்லா பாசமீந்தே.

எளிமையிலும் இனிமை
எங்கும் கண்டே.

உள்ளதைக் கொண்டு
உவந்தே வாழ்வோருக்கு.

வைரமும் வைடூரியமும்
முத்தும் பவளமும்.

தேவையினறிப் போனதோ
புன்முறுவல்களின் அணிகலன்களாலே.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# சத்திய மூர்த்தி காந்தி



மகாத்மா எளிமை வாழ்வு வாழ்ந்தவர்
விடுதலை உணர்வோடு வீறு நடை போட்டவர்
திருக்குறள் மீதும் தமிழ் மீதும் பற்றுக் கொண்டவர்
அறப்போர் முறையை தேர்ந்து எடுத்தவர்
ஆங்கிலேயரை எதிர்த்து அமைதியான முறையில்
விடுதலை பெறுவது சிறந்தது என்றவர்
மனிதனின் பெருமையை மனிதனுக்கு உணர்த்தியவர்
இளைஞர் உள்ளத்தில் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்
தெய்வப்பற்றும் வளர வேண்டுமென கனவு கண்டவர்
ஈகை சிகரத்தின் உச்சியில் நின்றவர்
உப்புக்காக உரிமைக்காக ஒற்றுமைக்காகப் போராடியவர்
முடங்கி கிடக்கும் பெண்களை எல்லாம்
சமூக நீதிக்காக போராளியாக மாற்றியவர்
உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார்
உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்பவர்
காந்தியடிகள் இல்லை என்றாலும் விட்டுச் சென்ற
கொள்கைகள் எல்லாம் நம்மை இன்றளவும் வழி
நடத்தி செல்கிறது
போற்றுவோம் காந்தியத்தை ஒவ்வொரு உள்ளத்திலும்.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# புத்தகம் பேசுகிறது

புத்திமதி கூறும் பெட்டகம் நான்
புத்தியை ஆக்கும் நூலகம் நான்
பக்கங்கள் யாவும் அனுபவமாகுபவன் நான்
பக்குவம் கூடும் அனுதினம் என்னால்
மனக்கவலைக்கு மருந்தகமாக இருப்பவன் நான்
மனது மூழ்கும் பெருந்தவம் நான்
படிக்க படிக்க பழக்கம் வருமபவன் நான்
படித்தப்பிறகு அதுவே வழக்கம் வருபவன் நான்

புத்தகம்



கவிஞர் ம. ஹரீஷ், செங்கல்பட்டு மாவட்டம்

# தனிமையை இனிமையாக்கிய கனிமொழியே



செவ்விதழ் சித்திரமே
கற்கண்டே பொன்னே
அதரங்களின் இனிப்பே
பருகிடக் களிப்பே

குறுநகையால் கவர்ந்தாயே
பூவிதழின் நறுமணமே
விழிகளின் மொழிகளில்
காதல் பாடமே

செம்பவளமே முத்தே
முத்தாரமே முத்தமிடவா
அருகில் அமர்ந்தாய்
ஆவலும் மீறுதே

தோளோடு தோள்
சாய்கையில் ஆனந்தமே
ஏந்திழையே உள்ளத்தில்
உறைந்திட்டாய் அன்பே

ஒன்றான நெஞ்சமதில்
வசந்தம் வீசிடுமே
காந்தமாய் ஈர்த்தவளே
கனியிதழ் அழைக்குதே

தனிமையை இனிமையாக்கிட
கனிமொழியே வாராயோ
ஊஞ்சலான இதயத்தில்
அன்பைத் தாராயோ

காத்திருந்த தருணமெல்லாம்
காரிகையின் நினைவுகளே
காலம் கனிந்திட
நேரமும் கூடியதே

கைத்தலம் பற்றும்
நாளும்தான் வந்திடாதோ
வாழ்வில் இன்பமும்
உன்னால் வந்திடுமே

கவிஞர் பெ. வெங்கடலட்சுமி காந்தன், விருதுநகர்

# ஞயமுடன் கற்றிடு

பா வகை - கலித்துறை ஐஞ்சீர் நெடிலடி
மா+ மா+காய் + மா+ மா.* 1,5 பொழிப்பு மோனை

கற்றால் என்றும் கனிந்திடுமே வாழ்வும் கற்க
வற்றா மாண்பும் வந்திடுமே கற்றே வளர்க
உற்ற துணையாய் உன்னுடனே வருமே உயர்க
அற்றம் இல்லா வாழ்வதுவும் பெற்றே வாழ்க

கல்வி என்னும் துடுப்பாலே கரையும் கடப்பாய்
இல்லா நிலையும் ஒழிந்திடவே இன்றே எடுப்பாய்
கல்லா முகத்தில் கண்களையே புண்ணாய் காண்பாய்
எல்லா வளமும் பெற்றிடவே ஏடும் எடுப்பாய்



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# நெடுந்தூர வாழ்வு



நெடுந்தூர பயண வாழ்விலே
நெகிழ்ச்சியான நிகழ்ச்சியும்
நெறிபடுத்திட எண்ணியே
நெஞ்சுக்கூட்டிலேறியே

நெடுங்காற்று வாடையே
நெட்டித்தள்ளிடும் தென்றல்புயலே
நெருக்காமான உறவுமே
நெருப்பாக மாறிட

நெஞ்சு பொறுக்குதில்லையே
நெசவுபோல வார்த்தையும்
நெய்தெடுத்து சேருதே
நெருஞ்சிமுள்ளாய் குத்திட்டு

நெடியேற்றி மனதிலே
நெடுங்கணக்காகியதே
நெடுநீர் ஆழமாக
நெடுமை பல உள்ளதே

நெட்டாங்கு மிகுந்த மனிதத்தோடு
நெம்புகின்ற பேச்சுமே
நெடுநாள் வலியை கொடுத்திடுதே
நெரித்து கொன்று மனதையே

நெருக்கடிக்கு உள்ளாக்குதே
நெருடுகின்ற மனமே
நென்னால் நிகழ்வுகளை
நெடுந்தூர வாழ்வு பயணத்திலே
சுமந்து செல்லாதே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# இருண்ட வனாந்தரத்தின் ஒரு புள்ளி

மழை விழுந்தவுடன் எட்டிப்பார்க்கும் விதைகள்
உயரப்பறக்க பறக்க
வானத்தை சிறிதாக்கும் பறவைகள்
புள்ளி விழுந்தவுடன் சுருங்கத் தொடங்கிடும் இருளென
எனது வனாந்தர அங்கங்களை
முழுதும் பிரித்து பார்க்க இயலாமல்
அடரில் மூழ்கி கிடக்கிறேன்

ஒரு சொட்டில் முழுதும் மலரும் புவி
சிறு வெட்கத்தில் முழுதும் மாற்றிடும் பெண்
பறந்துக் கொண்டே எச்சமிடும்
காக்கையின் அவசரத்தில்
சட்டென படர்கிறது வனமொன்று

ஒரு சிலை வடித்து சிந்திய
துகள்களிலெல்லாம் வடிக்க மறந்த
ஏதோ ஒரு நளினம் துண்டாகி விழுந்தது எனலாம்

ஏனோ சிறு மிச்சம் உள்ளது
எனது மனக்காட்டின்
இருண்ட வனாந்தரத்தில் விழுந்த ஒரு புள்ளி



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# இங்கே நிம்மதி

தனிமையும் இனிமையும்
கலந்த குட்டிச் சொர்க்கமதில்
கண்மூடிக் கனாக் கண்டு
கற்பனையில் கற்கண்டுண்டு
கண்ணியமாய் காலம் கழித்திருந்தேன்.

இறைவன் விதித்த தவணை
ஈரைந்து மாதங்கள்தான் என்றாலும் அவன்
ஈந்த இலவச
இரைதனை உண்டு
இனிமைகள் பல கண்டு
இன்புற்றிருந்தேன்.

நித்தமும்
நிசப்தமாய் துயில் கொண்டு நித்திரையில்
நிம்மதியைக் கண்டு
நிதமும் இந்நிலை நிசமாய்
நிலைத்திருக்கும் என்று நிச்சயமாய்
நினைத்திருந்தேன்.

நினைத்தது நடக்கவில்லை கனவும் பழிக்கவில்லை
இறை நியதியின் முன்னே
நிம்மதியும் நிரந்தரமாய் நீடிக்கவில்லை.



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல மாத்தளை

# குறுங்கவிதை

நாளை விடியும் என்ற
நிதர்சனத்தின் மூலம்
இயற்கை தருவது
நம்பிக்கையின் மூலம்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# சிந்தையின் உதிப்பு கவிதை

சிலரின் சிந்திப்பு ஆழம் அறியாதது
ஆழமாக இருப்பதுவே
பட்சிகளின் குரல்
ஓசையிலிலும் கவி
கடந்து வரும் நதிகளின்
சலசலப்பிலும் கவிதை

தென்றல் வீசிடும்
இதமான காற்றிலும் தருக்களின்
அசைவிலும் கவிதை

உணர்ச்சிகளை தொட்டு விட்டு செல்லும்
உணர்வுகளின் பிரதிபலனிலும் கவிதை
கவித்துவத்துக்கு வயதில்லை.
வயதறியாததும் கவியே

பல அர்த்தம் தரவல்லது
பலர் உள்ளம் கவரும்
கவிஞனாக மாற்றும் வல்லமை இதற்குண்டு
பாடும் தேனாக அமுத மொழியே கவிதை

கவிதை பலரகம் அதில் நாமும் படைப்போம் புதுரகம்.



கவிஞர் முர்ஷிதா பேகம், அக்குறணை

# இடப்பெயர்வு

அவ்வளவு ஒன்றும்
சாதாரணமாக
இருப்பதில்லை
இடப்பெயர்வுகள்.

இதமான உறக்கத்தினிடையே
திடுக்கிடச் செய்யும்
தீக்கனாவாக,

ஏற்படுத்திக் செல்கின்றன
மெல்லிய அதிர்வுகளை
மனத்தினூடே.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# கர்வக்காதல்

என் கர்வத்திற்கு
மேலும் இரு கொம்புகள்
முளைத்து விடுகின்றன.

ஒவ்வொரு முறையும்
என்னை நீ
பெயர் சொல்லி அழைக்கும் வேளையில்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தன் கையே தனக்குதவி

மற்றும் ஒரு வேலை மறந்தேனென;
இன்று அதை முழுவதும் முடிப்பேன்
என்று முயன்று,அதை நான்
முடித்திட வேலைக்கு ஆள் தேடினேன்.
வேலைக்கு ஆள் வந்தான், வேலையாள்
ஒருவன் வேளை தாழ்த்தி; பொழுது
இருக்க முடிப்பேன் வேலையை இன்றே
நன்றே என இயம்ப, நம்பினேன்;
அவனை நானும்.
அவன் கேட்ட
கூலிக்கு தலை அசைத்து இசைந்தேன்.
சாமான்கள் வாங்க
முன்பணம் உவந்தளிக்க;
இதோ! சடுதியில் வந்திடுவேன் என
இனிமையாய்ச் சொல்லிப் போனவனை,
இன்னும் நான் கண்டிலேன். தினம்
தேய்ந்து இரவும் வந்து அடங்க;
முடிவெடுத்தேன்; நல் முடிவு,முடிவாக
நாளை நானே செய்வேன்; தவறாமல்.
தன்கையே தனக்கு உதவி.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# இதயக் கோயில்

எந்தன் இதயக்கோவிலில்
அவள் குலசாமியாய்

எனது காதல் கருவறையில்
அவள் உற்சவ மூர்த்தியாய்

அவளின் காதல் சொற்களின்
அர்ச்சனையில் நான் உதிரிப்பூக்களாய்

கோவில் மணியின் ஒசையில்
உந்தன் குரல் காற்றில் கீதமாய்

ஆலய தீபங்களின் ஒளியில்
உன் முகம் கோபுர தரிசனமாய்

உன் சிரிப்பின் முத்துக்கள்
தெப்பக்குளத்தின் தாமரை மொட்டுக்களாய்

உந்தன் காதல் எனக்குள் என்றும்
இறைவனின் அருள் பிரசாதமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# பிரார்த்தனை

தோசம் நீங்காதோ பாசம் விளங்காதோ
வேகமாய் தாக்கி  தடயம் அற்று தாக்கி
எம்மை வீழ்த்த பார்க்குமோ

செவ்வாய் தோசமென்றால்
திருமண தடங்களாகுமா?
நேற்றைய கதையில்
அவ்வாறு தான் சொல்லப்பட என்னவென்றே
தெரியா திருப்ப சேதியில் நான்.

கொதித்து அலம்பி வழியும்
நீராய் மரித்து போகவோ
புலம்பி தீர்த்து என்ன செய்வது.
நாயனே! நாடக அரங்கல்லவே!

ரப்பே! ரஹ்மானே! பூவிதழ் போலவே
பனி சுமப்பதை போன்று நானும் வலி சுமக்கிறேன்.
என்னை மன்னித்து விடுவென கேட்கிறேன்.
காயமில்லை தான் வலிக்கிறதே.
என்ன செய்வேனோ
பாதையை நீகாட்டாது போனால்
நானொரு குருடாகி போவேனே.

அருளாளனே அருமை புதுமையின்றி
நாயகம் நபி முஹம்மத் (ஸல்)அவர்களின்
மகளார் அன்னை பாத்திமா போல உன்னை மறவாது
கண்ணணே கணவனோடு
நேசபாச அரவணைப்போடு வாழ்ந்திட வழிவகுக்கும்
சிறந்த துணையை தருவாயாக.

பொருளொன்று பொருந்திடாது
முழுமையாகுவதில்லை திருத்தம்
கணவனென்றவன் பிழைத்தால் ஆகிடும்
வாழ்வே சேதாரம்.

கரமேந்தி காத்திடுவென கேட்டு பூத்திடும் சிறப்பென்ற
வாழ்வை தந்து நிறப்பமாக்கி கொடு ரஹ்மானே!



கவிஞர் சஃஹானாஸ் பேகம், இலங்கை

# பேசிய மலைகள்

உருவத்தில் பிரமாண்டமாய்
உறுதியாய் கம்பீரமாய் இருந்தது.
காற்று கூட அனுமதி கேட்டு மோதியது.

அவன் உச்சி செல்ல செல்ல
உலக செய்திகளை விடு என்பது போல
காதுகள் அடைத்துக் கொண்டது.
சிறிய வலியும் தந்தது.

தள்ளுவது போலவே இருந்த சரிவுகள் உடல்
நிலையானது அல்ல என்பதை உணர்த்த நினைத்தது.

குழந்தைகள் இருந்தனர் ; இளம்பருவத்தினர் இருந்தனர்
பெரியோர்கள் இருந்தனர் ; பெற்றோர்கள் இருந்தனர்
காதலர்களை போலவும் சிலர் தெரிந்தனர்.

யுகங்கள் கண்ட மலை மௌன மொழியை
நிறைத்திருந்தான் அங்கு
தீண்டிய மௌனம்
என் இதழை முனுமுனுக்க செய்தது.

காற்றை மட்டும் ஸ்பரிசித்து இருக்கும் அத(வ)னின்
தியான நிலை என்னில் ஆட்கொண்டது.
அந்த முரட்டு காட்சியில் மென்மையை உணர செய்தது.

போகிறேன் என்று சொல்லக்கூட காட்சியில் இல்லை அவன்
இருளே முழுமையாய் போர்த்திருந்தது.
அவன் இருப்பதை உணர்த்த காற்றில்
குளிர்ச்சியை வெளிப்படுத்தினான்.

கீழே இறங்க இறங்க உலக மொழிகளோடு
உறவாட ஏற்பாடு ஆகிக்கொண்டிருந்தது காதுகள்
அவன் மொழிகள் காட்சியாகியதால்.

அவன் உச்சி முகர்ந்த தருணம்
இறைவா இதுதான் நிறைவா.



கவிஞர் நூருல் நய்மா அனீஸ்

# நூறாண்டு வாழ்வு



ஓய்வறியா உழைப்பும் ஓடி விளையாடும்
மனமும் வீர விளையாட்டால் வேர்வை சிந்தும்
உடலும் வஜ்சிரமாய் மாறிடுமே
அழகு மிலிர்ந்திடுமே!

அதிகாலை நடை பயிற்சி மிதமான உடற்பயிற்சி
உடலுக்கும் மனதிற்கும் மளர்ச்சியை தந்திடுமே
மகிழ்ச்சியை கூட்டிடுமே.

நோய் நொடி இல்லாத நூறு ஆண்டு வாழ்வை
முன்னோர்கள் வாழ்ந்த அந்த நாளை பாடமாய் கடைபிடிக்கும்
மனிதன் தான் ஆரோக்கியத்தின் செல்வமே.

இயற்கையோடு ஒன்றிய இனிய வாழ்வை
எந்நாளும் மேற்கொண்டால் வாழ்வே என்றும்
*இனிமையின் பக்கம்* என்னாலும் *சொர்க்கம்*.

*கைபேசியே வாழ்வாய்* கரைந்திடும் இளைஞர்கள்
கட்டான தேகம் நோயில்லா உடலோடு நூறு ஆண்டு வாழ்வோமே.

ஆரோக்கிய உடலும் அன்பான மனமும் கனிவான குணமும்
காலமெல்லாம் நிலைத்திட பண்பை போற்றி பயனுற வாழ்வோம்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம் சேத்தியாத்தோப்பு

# இலக்கே குறிக்கோள்

பயணிக்கும் பாதை
தொலைவாய்த் தெரிந்திட
கண்ணயரும் பொழுதிலும்
தொல்லைகள் துரத்துகின்றன

கைக்கெட்டும் கவளமும்
வாய்க்கெட்டா நிலைகண்டு
நிலைகுலைந்து நின்றுவிட்ட
நிமிடங்கள் ஏராளம்

உறவுகளின் உதாசீனம்
உள்ளத்தைக் கிழித்திட
உயிரும் உடலுக்குப்
பாரமாகிப் போனதுண்டு

அவ்வப்போது எட்டிப்பார்த்து
தட்டிக்கேட்கும் உணர்வுகளே
உயரிய வாழ்க்கையின்
பெறுமானத்தை உணர்த்துகிறது

இலக்கை நோக்கிய வியாபகம் இன்று
கிழக்கிலும் மேற்கிலும் அலையச் செய்கிறது
தடைகள் வந்து திடமாய்த் தடுத்தாலும்
உடைந்திடாமல் தொடர்ந்திட
சிந்தை போராடுகின்றது

இலக்கை அடைவதே குறிக்கோள் என்பதால்
சிரத்தை கொண்டு சிரமம் பொறுப்போம்
வெற்றிக் களிப்பில் இன்பம் கண்டே
இம்மை வாழ்வின் அர்த்தம் புரிவோம்



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை



### மௌனம்

புரிதலற்ற வார்த்தை வீச்சுகளும்
அதனால் உண்டான
ஆழமான ரணங்களும்
அள்ளித் தந்த பரிசு.

### வெளிநாட்டு வேலை

நிஜம் தரும் வலியை
நினைவு தரும் சுகம்
மறக்கச் செய்யும்
நம்பிக்கையில் நகர்கிறது
வாழ்க்கை.

### வாழ்க்கை

சிலருக்கு அழகிய கோலம்
பலருக்கு அலங்கோலம்
நட்பு பாலம் அமைத்தால்
இனியாவது இனித்திடும்
எதிர்காலம்

### மழலை

நாம் சிரித்தால் சிரிக்கும்
அழுதால் அழும்
பாதரசம் பூசப்படாத
கண்ணாடி

### பணம்

எல்லோருக்கும் பிடிக்கும்
இது இல்லாவிட்டால்
பைத்தியமே பிடிக்கும்
என்றுமே மார்க்கெட்
சரியாத கதாநாயகி.

கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

# இங்கே நிம்மதி

தனிமையும் இனிமையும் கலந்த
குட்டிச் சொர்க்கமதில்
கண்மூடிக் கனாக்கண்டு
கற்பனையும் கொண்டு
கட்டணம் ஏதுமின்றி கனியமதுமுண்டு
கண்ணியமாய் காலம் கழித்திருந்தேன்.

இறைவனின் தவணை
ஈரைந்து மாதங்களே என்றாலும்
அவனீந்த இலவச இரைதனையுண்டு
இனிமைகள் பல கண்டிருந்தேன்.

நித்தமும் நிசப்தமாய்
துயில்கொண்டு நித்திரையில்
நிம்மதியை கண்டு
நிதமும் இந்நிலை
நிஜமாய் நிலைத்திருக்குமென்று
நிச்சயமாய் நினைத்திருந்தேன்.

நினைத்தது நடக்கவில்லை
கனவும் பழிக்கவில்லை
இறை நியதியின் முன்னே
நிம்மதியும் நிரந்தரமாய் நீடிக்கவில்லை.



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல மாத்தளை

# காணாமல் போன தோழி

சித்திர வடிவமாய்
நெடுநெடுவென்று உயரமாய்
ஒன்று போல் உடை உடுத்தி
மிதிவண்டியில் ஊர் சுற்றி
விரும்பியதைச் செய்து
வாழ்ந்திருக்கும் காலம் வரை
கை கோர்த்துப் பயணிக்க
சூளுரைத்துக் காணாமல் போன தோழியே!

பாதியில் என்னைக் கைவிட்ட
காரணத்தைக் கூறிடாமல்
பிரிவுத்துயரில் ஆழ்த்திவிட்ட தோழியே!
யாராலும் இட்டு நிரப்ப முடியாத
உனக்கான இடம் இன்னும்
என்னுள் காத்திருக்கு!

பொலிவிழந்து வாடி இருக்கும்
வாழ்க்கைக்கு வண்ணம் சேர்க்க
மீண்டும் வருவாயா?

காலன் என்னை சேரும்
நாளுக்குள் மீண்டும் ஒருமுறை
அந்த நாளின் நினைவுகளில்
வாழ்ந்திடும் ஆசைக்காக
ஒரு முறை சந்திப்போமா?



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# மாற்றம்

நித்தம் எழுதும் கவிதைகள் எல்லாம்
நீண்ட ஆயுளைக் கேட்கின்றன
கொட்டித் தீர்க்கும் அன்புள்ளங்கள் எல்லாம்
கோடி மடங்காய்த் திருப்பித் தரக் கேட்கின்றன

இருளாய்ப் போன நாட்கள் எல்லாம்
விடியலைக் கேட்கின்றன
அழுது முடித்தும் கண்ணீர்த் துளிகள்
ஓயாமல் வழிகின்றன

தோல்விகள் நிறைந்தும் கனாக்கள் மட்டும்
உயிர் வாழ்கின்றன
சிந்திக்காமல் எடுத்த முடிவுகள் எல்லாம்
மற்றுமொரு வாய்ப்பைக் கேட்கின்றன

விட்டுப் பிரிந்த உறவுகள் கூட
மீண்டும் ஒரு சந்திப்பைக் கேட்கின்றன
அழகிய நினைவுகள் எல்லாம்
வரவேற்பைக் கேட்கின்றன

வெற்றுப் பக்கங்கள் கூட நிரப்பி விட சொல்லி
வரம் கேட்கின்றன
பாதைகள் முடிந்தும் பயணங்கள் தொடர்கின்றன

இவ்வரிகள் எல்லாமோ மாற்றம் ஒன்றை வேண்டியே
நித்தம் ஏங்கிக் கொள்கின்றன



கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# அந்தி சாயும் மாலைப் பொழுதில் மயக்கத்தில் நான்

மாலை நேரம் செவ்வானம் தனிலே
ஒரு துளி இடைவெளி கூட இன்றி
ஒன்றை ஒன்று உரசிய வண்ணம்
வானிலே கண்கவர் கருமுகில்கள் தானும்
பரந்திருக்கக் கண்டேன்!
பார்ப்பதற்கு இரு விழிகள் போதாது
பல விழிகள் வேண்டும் என
வாய் பிளந்து பிரமித்துக் கொண்டே
அவ்விடத்திலேயே மெய் மறந்து உட்கார்ந்தேன்
இயற்கை அழகைக் கண்டு இரசிக்க ஆரம்பித்தேன்!

அது மட்டுமா, இதையெல்லாம் திரட்டி
கவிதை மொழிய உத்தேசித்து
காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு
மறுபடியும் அவ்விடம் வந்து அமர்ந்தேன்!

கவிதை மொழிகையில்
நான் படித்து உருகிய கவிதைகளைப் படைத்த
என் அன்புக் கவிஞர்கள் நினைவுக்கு வரவே

என் சிந்தனைகளைக் குழப்பும் வகையில்
ஊசி போட்டு என்னைத் தொல்லை செய்ததே
அந்த ராட்சச நுளம்புகள்!

என் இரத்தத்தைச் சுவைத்துப் பார்க்க
அவற்றுக்கு ஆசை போலுமென்றே நினைத்து சிரித்தபடி

இரவின் நடுநிசியில் மின்குமிழ் இன்றி
இயற்கையை இரசித்தபடி - நான்
இயற்கையின் இரசிகை!



கவிஞர் சுஹானா மோகனகுமார், யாழ்ப்பாணம் (இலங்கை)

# கடிதம் எழுதினேன்

கண்ணில் நிறைந்திருக்கும்
உந்தன் பிம்பம்.
நெஞ்சில் உறைந்திருக்கும்
உந்தன் உருவம்.
கள்ளமில்லா சிரிப்பை காண
காத்திருக்கும் நேரம்.
காணாது வேளையில் ஒரு கடிதம் எழுதினேன்.
கருவறையின் வாயிலில் சிக்குண்டு தவித்தாயோ?
கதிரவனின் வரவுக்கு தான் காத்திருந்தாயோ?
கண் மலர்ந்து முகம் காண
காலங்கள் மாறும் என்றே
காத்திருப்பேன் கண்ணீர் மல்க
போகாத ஊருக்கு வழி போல
பொக்கிஷமாக எழுதி வைத்தேன்.
கை சேருமா இல்லை
காத்துக்கிடக்குமா?
யாவும் நீயாய் தெரிந்திட
மனதில் எழுதினேன் ஓர் கடிதம்.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# காலங்கள்

இம்மையும் மறுமையும்
சொல்லிக் கொண்டு வருவதில்லையே!
கால தேவனின் கணிப்பில்
ஒவ்வொரு உயிருக்கும் வேறு வேறு நிலையே!
கற்பகத்தருவின் நிழலிலே நின்றாலும் கூட
தன்வினை சுட்டுத்தானே தீருமே!

கப்பலில் பயணம் செல்பவன் முதல்
நடைப்பயணம் செய்பவன் வரை
வரும் பேரிடர்களை சந்தித்து தானே தீர வேண்டுமே!
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் அன்றோ!
உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும்
தன் பசியை தானே பேணுகின்றனவே!

மனிதன் மட்டுமே உடல் உழைப்பு கொண்டே
ஊதியத்தை நல்கியே வாழ்கிறானே!
பூங்காற்று அனைவருக்கும் தென்றலாக
பாரபட்சம் இன்றி வீசுகிறதே!
வான் முகிலும் அனைவருக்கும் பொதுவானதே!
கடிகாரம் இடைவிடாது ஓடிக்கொண்டே இருப்பதால்தான்
என்னவோ அது உயரத்திலேயே இருக்கிறது.

நிலமகள் அனைத்து ஜீவத்திற்கும்
நல்வாழ்வு அளித்துக் கொண்டே இருக்கிறாளே!
நாம் செய்யும் நற்பலன்களைக் கொண்டு
நம் கர்மா நம்மை வழி நடத்துமே!
மூத்தோர் சொல் வழி நடந்தால்
தீதும் நன்றும் பிறர் தர வாராது அன்றோ!
கடமையை செய்வோம் பலன் நிச்சயம் கிடைக்குமே!
காலங்களை திட்டமிட்டு நாம் செவ்வனே செய்தால்
கை மேல் பலன் வருமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# உலர்ந்த துணைகள்

இணைந்த உறவுகள்
எதிரும் புதிருமாயி

இணையாத கோட்டிற்கு
பாலமிட்டன

உதித்த மலர் ஓரத்தில்
உலர்ந்து தவித்து

பிரியாத வரம் கேட்டு
மருகி மருளுது

தவறாகிப் போனது யாதோ
தண்டனை யாருக்கு

புரிதல் பிழையாகி
பித்தம் தலைக்கேறி

பிடிவாதப் பாலத்தின் பயணம்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# நீயில்லா வாழ்வு

நீயில்லா வாழ்வு
நிம்மதி அற்றது
பயிரில்லா வயலாய்
பயனற்றுப் போனது


நீரில்லா நிலமாய்
வறண்டு சாகுதே
வானில்லா நிலவாய்
வழியின்றித் தடுமாறுதே

தலைசாய ஓர்மடி
தனித்துவமாய்த் தேடுதே
வலியினைப் போக்கும்
மருந்தாய்த் தெரியுதே

உணர்வுகள் அனைத்தும்
எறும்பாய் ஊறுதே
காதல் நேசத்தை
கனியாய்ச் சுவைக்குதே

மனதும் அழுது
வருத்தத்தில் புலம்புதே
கனவுகளை நினைவாக்க
கதியாய்த் துடிக்குதே

என்நெஞ்சம் தொட்டவா
எனையாளும் மன்னவா
உன்னால் உயிரும்
உழலுது வாழ்வோடு



கவிஞர் கிருஷ் அபி, இலங்கை

# இந்தியா

தமிழ்த் திருநாட்டை அங்கமாய்க் கொண்ட
தாய்த் திருநாடாம் இந்தியா!

அந்நியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்ற
நல்வீரர்கள் வாழ்ந்த இந்தியா!

அயல் நாடுகளுக்கு நாங்கள் சளைத்தவர்கள் இல்லை என
இராணுவ வீரர்களை பெற்ற இந்தியா!

விவசாயி முதல் விஞ்ஞானி வரை
வித்தகர்களை உருவாக்கிய இந்தியா!

இந்தியன் என பெருமைப்படும் அளவுக்கு
மற்ற நாடுகள் போற்றும் இந்தியா!

அனைத்துத் துறைகளிலும்
சாதித்த நமது இந்தியா!


இந்தியன் என்பதில் நம்மைப்
பெருமிதம் கொள்ள வைக்கும் இந்தியா!



"அனைவருக்கும் இனிய குடியரசு தின நல்வாழ்த்துகள்"

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

நாச்சியார்தம் திருமொழியின் பதினான்கு: "பட்டிமேய்ந்தோன் "
1 முதல் 10= 10. 1 லிருந்து 5=5. 05




கார்வண்ணன்! தனித்துவனே! பலதேவன் இளவலவன்!
பரமபத அனுபவத்தை விட்டவனாய் விருந்தாவன
திரிதலுற்றான் கோகுலத்தின் வெண்ணைதனை சுவைத்திட்டு
நப்பின்னை மணமேற்றான்! இச்சித்த பசுக்களினை
பெயரிட்டு நேரழைத்து நீர்பருக வைத்திட்டு
மேய்ச்சலுக்கு விட்டதனை தையவள் முதலாவது
பாசுரத்தே வைத்தனளே! கோதையை கண்ணனவன்
பிரிந்ததனால் துன்புற்றாள்! வெண்ணைமண வாயோடு
காளையான் கண்ணன்தனை கண்டீரோ? கருநிறத்தன்!
வெண்மாலை சூடியவன்! நண்பரொடும் ஆடுகின்றான்!
கண்டுமகிழ் உற்றீரோ என்றறிய இரண்டாவது
பாசுரத்தே வைத்தனளே! ஆய்பெண்கள் பாசத்தான்!
பாசமுள்ள மணவாளனாய் பொய்பலவும் தான்பேசி
திரிந்திட்ட இடமெல்லாம் கண்டீரோ எனும்வினாவை
மூன்றாவது பாசுரத்தே உணர்ந்தோமே! கருமேகத்
தேகத்தே மலர்தாமரை போன்றகண்ணான்! என்றன்னை
சூழ்ந்தீர்த்தான்! குட்டியானை அனையனவன்! ஆடுகின்றான்
என்னோடே! கண்டுகளி பல்லோர்போல் பார்த்தீரோ?
என்றவினா நான்காவது பாசுரத்தே வைத்தனளே!
திருமகளின் கேள்வனான மாலவனோ நீலரத்தினம்
போன்றமைந்த இனிமையான்! வலைதப்பிய பன்றிபோலே
பெருமையான்! சொந்தமெலாம் தனக்குற்றான்! யார்க்குமீயான்!
மஞ்சள்நிற நல்லுடையான்! சிறுமேகக் கருணையினான்!
வீதிநிரப்பும் மேன்மையினான்! கண்டீரோ அன்னோனை
என்றறிய ஐந்தாவது பாசுரத்தே வைத்தனளே!
முதலைந்து ஈண்டுகண்டோம்! மற்றைந்து தொடர்ந்திடுமே!
கோதைதமிழ் சுவையாழ்ந்து தீந்தமிழை பருகுவமே!


கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# புதுவானம்

அழகாய் பூக்கும் புதுவானம்
நாளை உந்தன் வசமாகும்
நேற்று இருந்த தடையெல்லாம்
இன்று மாறும் வழிவிலகி
என்றும் வாழ்ந்திடு நுணங்கி

இலக்கை நீயும் குறிவைத்து
முயற்சி என்னும் விதையிட்டு
நம்பிக்கையான உரம்ஊட்டு
அழகாய் பூக்கும் புதுவானம்
அன்பே உந்தன் கைசேரும்

வாழ்க்கை என்றும் வாழ்வதற்கே
வானம் எட்ட பறந்துவிடு
தடைகள் புயலாய் வந்தாலும்
புதியபாதை உனக்கென வகுத்துவிடு
வீறுநடை போட்டு வென்றுவிடு



அலைகடல் பார்த்து கற்றுக்கொள்
கரை சேரா திரைகளும்
மண்ணுக்குள் இரையாவதும் இல்லை
முயற்சியை வரையறை செய்வதுமில்லை
தற்காத்து விரைவாய் கடலினுள் சேரும்

கரைசேரா திரைகள் ஒருபோதும்
மண்மீதும் குறை சொல்வதில்லை
விண் மீதும் குறை சொல்வதில்லை
மீண்டும் மீண்டும் தோற்றாலும்
மழலையாய் தருமே புதுமுத்தம்

ஒருநாள் செய்வது முயற்சியன்று
நாளும் பயிற்சியாய் விரும்பிச்செய்
தொடர்வெற்றி தேடித் தழுவும்
ஆண்டவன் தந்த விதைநீ
விருட்சமாகாமல் விழுந்துவிடாதே

உழைப்பு என்னும் கயிர்கொண்டு
வெற்றியை கட்டிவை மகிழ்வாய்
உன் வீட்டுத் தோட்டத்தில்
அழகாய் காணும் புதுவானம்
அன்பாய் அழகாய் கைசேரும்

கவிஞர் சக்திகுமார் காளியப்பன், புளியங்குளம் கோவில்பட்டி


# பாவேந்தர் பாரதிதாசன்

புதுவையில் தோன்றிய தமிழ் வளர்ச்சியே
புதுமையால் செய்தாய் தமிழுக்கு மலர்ச்சியே
பாரதி மேல் அன்பு கொண்ட தாசனே
பெண்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஈசனே
வீரமங்கையாய் பெண்ணை வளர்க்கப் பங்களித்தனை
ஆணாதிக்கம் உடைக்கவே உமது படைப்புகள்
அடைப்பு ஏற்பட்ட இடங்களில் செய்திட்டாய் உடைப்பு



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# வேறெதுவும் வேண்டாம்



வேரூன்றிய நிஜங்கள்
எப்போதும்
அழகிய அனுபவங்கள்

நினைவுகள்
இலையுதிரா வசந்தங்களாய்
வேர்களுக்கு நீர் பாய்ச்சும்.

காலங்கள்
கடந்து போனாலும்
நினைவுகளால் ஊறும்

ஆனந்தக் கண்ணீருக்கும்
இனிமேல் இடம் இல்லை
எனும்போது
பிரிவுகளை தாங்க மறுக்கும்.

நினைவுகளின் மீளல்களில்
கண்ணீருக்கு மட்டும்
மரணம் வரும் வரை பஞ்சமில்லை .

என்னதான் சந்தோஷங்கள்
இடையில் வந்தாலும்
புதையல் கிடைத்த சுகமாய்
சில ஞாபகங்கள் வந்தே மறையும்.

அப்போதெல்லாம்
உள்ளம் உருகிக் கேட்கும்
உயர்வான இடம் அவர்கள்
தங்குமிடமாக வேண்டும்

அது போதும்
இப்போதைக்கு
வேறெதுவும் வேண்டாம் .

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# நீயிருந்தால்



தண்ணீரில் தாமரையாய்
நியிருந்தால்,
தவளையாக நான்மாறி
தஞ்சம்புக மாட்டேனோ.

கடைதிறக்க காத்திருக்கும்
மொட்டாக நீயிருந்தால்,
காலைவரும் கதிராகி
கதவுதட்ட மாட்டேனோ.

வண்டுக்குத்தான் உன்பெருமை
அறிந்த கதை நானறிந்து,
ஏதுமறியா ஏமாளியாய்
இருந்துவிட மாட்டேனோ.

ஒட்டாத இலைமேலே ஒட்டிவிட
நான் முயன்று,
ஒப்பிலாலா உவமையென
நான் மாற மாட்டேனோ.

தண்ணீரின் இயல்பறிந்து
தண்டு வளர்வதுபோல்
உன்னுயரம் நானறிந்து
வளர்ந்துவர மாட்டேனோ.

பற்றாத பாசியென பற்றிக்
கொள்ள நான் முயன்று,
வற்றாத குட்டையின் மேல்,
வாழ்கை நடத்தமாட்டேனோ.

கொத்துக் குளவியாட்டம்
நீ கூடு கட்டயிலே,
கூண்டுப் பழுவாகி
குடிபுகவே மாட்டேனோ.

பச்சைப் புல்லாட்டம்
பத்தினியே நீயிருந்தால்,
பனிகுடிக்கும் கதிராட்டம்
பற்றிக் கொள்ளமாட்டேனோ.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# எண்ணுவது என்னவோ?

ஆண்டாள் மார்கழியில் நோற்றது பாவைநோன்பு!
அவ்வழியில் வந்த நவீன ஆண்டாளோ?
கன்னியரைத் துயிலெழுப்ப காலைப் பொழுதினிலே
என்ன செய்யலாம் என்கின்ற யோசனையோ?
இணைய உலகமிது! நவீன உலகத்தின்
நடைமுறையை யோசித்து, திறன்பேசிதனை கையில்
எடுத்தாயோ? விளையாட்டுப் பருவத்தில்
இணைய அடிமைகளாய் இல்லாமல் நீங்கலெளாம்
பயனுள்ள வகையில் பயன்படுத்தல் அற்புதம்தான்!
கூடையுடன் இருவர் கூட இருக்கையில்
ஈடேறட்டும் உங்களின் இனிய சிந்தனைகள்!
பெண்களுக்கு எதிரான வன்முறைகள், கொடுமைகள்
இந்நாளும் தொடர்வதால் எச்சரிக்கை உணர்வுடன்
எந்நளும் செயல்படுங்கள்! பாரதிகண்ட புதுமைப்
பெண்களாய் கல்வி,கலைகளில் சிறந்தோங்கி
வீரமுடன் விளங்கிட வேண்டுகிறோம் இறைவனிடம்!
திறன் வளர்க! உயர்வடைக! உங்களால் நாடுயர்க!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# கொஞ்சம் கொஞ்சமாய்

பகிரப்பட்ட செய்தியை
உண்மையென யோசிக்காமல்
உறுதிப்படுத்தாமல்
சொல்கையில்
கேட்கப்படும் கேள்வியான
"நல்லாதெரியுமா?"
என்பதற்கு, முதலில்
"ஆமாம்"

மீண்டும் மீண்டுமான
சந்தேகக் கேள்விகளில்
"அப்படித்தான் நினைக்கிறேன்"

அடுத்ததாய்
"உறுதியாய் தெரியவில்லை"

கடைசியாய்
"கேள்விப்பட்டதை சொல்கிறேன்"

கொஞ்சம் கொஞ்சமாய்
ஸ்ருதிகுறையும் பதில்கள்.



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# காதல் இல்லாக் காதல் ஹைக்கூக்கள்

சீண்டலின் எல்லையில்
காது கடிப்பாய்
வீட்டுக்குப் போகனும்
*

தொலைபேசி நொடிகளில்
பேச்சு மாற்றுவாய்
அருகில் யார் வருகை
*

அலைபாயும் மனம்
தியானம் வேண்டாம்
உன் நினைவிருக்கையில்
*

போர்க்கள வலிமை
புதைந்து விடுகிறது
உன் புன்னகைக் கேணியில்
*

உன் முகமே தெரிகிறது
நீ பரிசளித்த கடிகாரத்தில்
காணும் சுவரெங்கும்
*

வருடம் மாறினாலும்
புத்தகம் மாறினாலும்
தொடரும் உன் மயிலிறகு
*

வானொலியில் நம் பாடல்
புரையேறுகிறது எனக்கு
கேட்கிறாய் நீ
*




குடையில் நீ
கேட்கிறேன் உதவி
நனைகிறோம் நாம்
*

பிரம்மன் கவிதை
உன்னைப் படித்து
நம்மைப் படைக்கிறேன்
*

பரிசு கொடுத்து
என்னைக் காட்டினேன்
பரிசென உன்னைக் கொடுத்தாய்

கவிஞர் இளையவன் சிவா



கவிஞர் ஆயிரம் ஓவியர் ஆயிரம்
பொல்லாத பேரழகி நீ
அனைவரிடமும் தப்பித்து
என்னிடம் மாட்டிகொண்டாய் பார்

***

எனக்கான நறுஞ்செய்தி
என்னவள் குறுஞ்செய்தி

***

அமைதி கொள்ளுங்கள்
நமக்கு பிடித்த வரிக்காக
முழு பாடலையும் கேட்பதில்லையா
வாய்ப்பும் அப்படிதான்

***

மனிதன் எவ்வளவு குப்பையை
கடலில் போட்டிருந்தால்
கடல் இவ்வளவு நுறையாய் எச்சில் துப்பும்
யூகியுங்கள்

***

தீர்க்கதரிசிகளில்
எழுத்தாளர்கள் தான்
அதிகம்

***

மனித மூளை
வளர்ந்துள்ளது !
விலங்குகளின் மூளையை
உண்ணும் அளவு

***

மணி ஆறு
ஏழு மணிக்கு சந்திக்க வேண்டும் என்கிறாய்
எனக்கு பயண நேரமோ ஏழு மணி நேரம்
அவ்வளவு தொலைவில் இருக்கிறேன்
பயண நேரத்தையும் சேர்த்துக்கொள்
காதலிக்கலாம்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# சிவந்த மேகங்கள் (நாவல்)

## அத்தியாயம் -11

## மந்திரியும் பழனியும்

எதிர்பாராமல் மந்திரியும் பழனியும் திறந்து கிடந்த கழிவறைக்குள் சரிந்து விழ, சுதாரித்துக் கொண்ட பழனி வேகமாக எழுந்து கதவை மூடிக்கொள்ள, மந்திரி ஓங்கி பழனியின் முதுகில் உதைத்தார்.



பழனி ஒதுங்கிக் கொள்ள, தவறிப் போய் வாஷ்பேஸினில் மாதவன் விழ, உதடு கிழிந்து இரத்தம் வர ஆரம்பித்தது.

மறுபடியும் மந்திரி மாதவன் ஆக்ரோசமாக தாக்க, பழனி இந்த முறை அவருடைய கையை முறுக்கிப் பின்னால் பிடித்துக் கொண்டு மந்திரி மாதவனின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொள்ள முயற்சித்தான்.

மிகவும் பலமாக உதறிக் கொண்ட மந்திரி பையிலிருந்து துப்பாக்கியை எடுத்து பழனியை நோக்கி நீட்ட, இரயிலின் வேகத்தில் பழனி அவரைத் திரும்ப ஓங்கி அடிக்க, மந்திரி மாதவன் தடுமாறி வீழ்ந்தார். அவர் கையிலிருந்த துப்பாக்கி நழுவிக் கீழே போக ''உதவி..உதவி...'' என்று கத்தினார்.

பையிலிருந்து கர்ச்சீப் எடுத்து அவர் வாயில் வைத்து விட்டு ''ராஸ்கல்... உன்னை இன்றைக்கு உயிரோடு விட மாட்டேன். உன்னைத் தொடர்ந்ததற்கும் உன்னைக் கொல்ல முயற்சித்ததற்கும் இன்று தான் முடிவு கிடைத்திருக்கிறது.'' என்று கத்தியவாறு அவர் கழுத்தை இறுக்கினான்.

வெளியேயிருந்து கதவு தட்டும் சத்தம் கேட்க, அவனையறியாமல் கைகள் தளர, வேகமாக முண்டியடித்துக் கொண்டு எழுந்த மந்திரி மாதவன் வேகமாக கதவைத் திறக்க, அவர் காலைத் தட்டி விட்டான் பழனி.

கதவு திறக்க, வெளியே வந்து விழுந்த மந்திரி எழுந்து சுதாரித்து கொண்டு வாயிலிருந்த கர்ச்சிப்பை துப்பி விட்டு ஓட திரும்பவும் பழனி வந்து பிடித்துக் கொண்டான்.

கவிஞர் இராஜகைநிலவன்

ஒரு உதறலில் அவனைப் பிடித்து தள்ளி விட்டு, எழுந்து நின்ற மந்திரி "எழும்புப்பா, இப்பொழுது நான் வேகமாக விரலைச் சுடுக்கினால் போதும், என் உதவியாளர்களும் மெய்க்காப்பாளர்களும் குண்டினால் உன் உடலைச் சல்லடையாகத் துளைத்து விடுவார்கள். இனி விளையாடாதே. உன்னைக் காலிப்பண்ணுவதற்குள் எனக்குள் ஒரு சின்ன குறு குறுப்பு அதைத் தெளிவு படுத்திக் கொள்ள முதலில் முடிவு பண்ணிக் கொள்கிறேன்.

"சொல்லு யார்நீ? உன் பெயர் என்ன? என்னை ஏன் கொலை செய்ய தொடர்ந்து வருகிறாய்." அவன் ஓடி விடாமல் குறுக்கே நின்று கொண்டார்.

இரயில் குகைக்குள் ஓடிக் கொண்டிருக்க....., இருளும் வெளிச்சமும் மாறி மாறி இரயிலுக்குள் சிதறிக் கொண்டிருக்க, டியூப் வெளிச்சம் கண்ணைக் கூசிக் கொண்டிருந்தது. இவரிடம் உண்ண்மையைச் சொல்லலாமா? தப்பிக்க முடியுமா இல்லை என்றால் எப்படியும் நாம் காலியாவது உறுதி. அதற்கு முன்னால் வலம்புரி மாதவனை எமலோகத்திற்கு அனுப்பி விட்டு நாமும் அவரோடு போவோமா? எதிர்பாராமல் இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே.... இவனைக் கொன்று விட்டு, அந்த அடையாளமே தெரியாமல் ஊருக்குப் போய் வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று எவ்வளவு திட்டங்கள் தீட்டிக் கொண்டு வந்தேன். எல்லாமே தோல்வியாகி விட்டது. என்ன செய்யலாம்? பின்னாலே கதவு திறந்து கிடக்கிறது.

'வேகமாக மோதி மந்திரி மாதவனை இரயிலிலிருந்து கீழே விழத்தட்டி விட்டால் அவனுடைய எலும்புகள் கூடமிச்சம் கிடைக்காது.' யோசித்துக் கொண்டிருக்கும் போதே "என்னப்பா ரொம்பா யோசித்துக் கொண்டிருக்கிறாய்? இனி எதுவும் செய்ய முடியாது. சொல்லு, என்ன விசயமாக என்னைக் கொலை செய்யவந்தாய்? எதிர்க் கட்சியினர் யாராவது உனக்குப் பணம் தந்து என்னைக் கொலை செய்யச் சொன்னார்களா? இனியும் நீ யோசிக்க ஆரம்பித்தால்,......ஓகே...ஓகே.... என்னைக் கொல்ல இன்னும் உன் மனதில் வேகமாக முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும்.....அவைகளை விட்டு விடு. கமான் யார் சொல்லு. என்ன விசயமாக என்னைக் கொலை செய்யவந்தாய்?" ஓங்கி பழனியின் கன்னத்தில் அறைந்தார் மந்திரி. கீழே விழுந்தவனை திரும்பத் தூக்கி விட்டார். இரயிலின் வேகத்தில் இருவரும் கீழே விழ, பழனியோடு திரும்பவும் எழுந்தவர், மறுபடியும்

# சிவந்த மேகங்கள் (நாவல்)

## அத்தியாயம் -11

## மந்திரியும் பழனியும்

பழனியின் கன்னத்தில் அறைய, பழனிக்கு மணடைக்குள் இடி மின்னல் எழுந்தது. கன்னத்தில் வலி சுள்ளென்று உறைத்தது.

''சொல் யார் நீ?'' என்று திரும்பவும் மந்திரி மாதவன் கையை ஓங்க, தடுத்தவன்.... ''என் பெயர் பழனி.'' என்றான்.

''ஏன் என்னைக் கொலை செய்ய தொடர்ந்து வந்தாய்?'' மாதவன் கோபமாகக்கேட்டார். ''என் தங்கை தற்கொலை செய்து கொண்டதன் காரணமாக.'' வலியை உணர்ந்தவன் உதட்டை துடைத்துக் கொண்டே சொன்னான்.

''உன் தங்கை தற்கொலை செய்து கொண்டதற்கு நான் என்னப்பா செய்தேன்.'' ஏளனமாகக் கேட்டார் மாதவன். ''உனக்கு கவுசல்யாவை தெரியுமா?''

''ஓ அந்தக் குளித்தலைக் கொண்ட புரத்து கவுசல்யாவா? அவளுக்கு யார் நீ? காதலனா?'' என்று கேலியாகக் கேட்டார். மனதிற்குள் எழுந்த கோபத்தை ஒன்று திரட்டி, பலத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு வேகமாக ''நான் கவுசல்யாவின் அண்ணண்டா. உனக்கு எமனாக வந்திருக்கிறேன். உன்னைக் கொன்றால் தான் என் தங்கையின் ஆன்மா சாந்தியடையும்.'' என்று ஆக்ரோசமாகக் கத்திக் கொண்டு மந்திரியின் மேல் வேகமாகப் பாய்ந்தான்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் மந்திரி ஒதுங்கிக் கொள்ள, இரயில் தடக்..தடக்கென்று நதியின் மேல் ஓடிக்கொண்டிடுக்க கதவுவழியாக வெளியே விழுந்த பழனி தொபுக்கென்று நதியில் விழுந்தான். மந்திரி கண்ணாடியில் முகம் பார்த்து, இரத்தத்தை எல்லாம் கழுவிக்கொண்டு இருக்கைக்குத் திரும்பி வந்தார் பெருமூச்சு விட்டவாறு. முகத்தை டவலை எடுத்து துடைத்தவாறு.

உதவியாளர்கள் எல்லோரும் ஓடிவந்து ''என்னசார்.. என்னாச்சு?'' என்று கேட்க ''ஒன்றுமில்லை.'' என்று திரும்ப ஜன்னல் கம்பியில் பழனியின் முகம் தெரிய ''நீயா? என்று கத்தினார்.

தொடரும்...

கவிஞர் இரஜகைநிலவன்

# எச்.ஏ.கிருஷ்ண பிள்ளை

## கட்டுரை



### பிறப்பு, இளமை

கிருஷ்ண பிள்ளை தென்தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டி அருகே கரையிருப்பு என்னும் சிற்றூரில் ஏப்ரல் 23, 1827-ல் வேளாளர் குலத்தில் வைணவ குடும்பத்தில் பிறந்தார். தந்தை சங்கர நாராயண பிள்ளை, தாய் தெய்வநாயகியம்மை.

### தனிவாழ்க்கை

திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்தவ மதப்பணி தீவிரமாக நடந்த காலகட்டத்தில் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை வாழ்ந்தார். இடையான்குடி என்னும் ஊரில் வேதவிளக்கச் சங்கத்தின் சார்பாக கால்டுவெல் மதப்பணி செய்து வந்தார். சாயர்புரத்தில் ஜி.யு. போப் ஒரு கல்லூரி தொடங்கி நடத்தி வந்தார். போப் ஓய்வுக்கு சில காலம் இங்கிலாந்து சென்றபோது அக்கல்லூரிக்கு தமிழ் ஆசிரியர் ஒருவரை கால்டுவெல் தேடிக் கொண்டிருந்தார். அப்பதவிக்கு விண்ணப்பம் செய்த மூவருள் ஒருவரான இருபத்தைந்து வயது கிருஷ்ண பிள்ளை தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் திறமை கொண்டிருந்ததால் கால்டுவெல் அவரையே 1853ல் சாயர்புரக் கல்லூரியில் தமிழாசிரியராக நியமித்தார்.

### திருமணம்

எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை தன் 14-வது வயதில் 9 வயதான முத்தம்மாளை மணம்புரிந்துகொண்டார்.

### மதமாற்றம்

1857ல் சென்னைக்கு சென்றார். தன் முப்பதாம் வயதில் , 18 ஏப்ரல் 1858 ல்சென்னையிலுள்ள மயிலை தூய தாமஸ் தேவாலயத்தில் ஞானஸ்நானம் பெற்று ஹென்றி ஆல்ஃப்ரெட் கிருஷ்ணபிள்ளை எனப் பெயர் ஏற்று கிறிஸ்தவரானார். சில ஆண்டுகளுக்கு பின் அவருடைய மனைவியும், மூன்று குழந்தைகளும், தாயாரும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# எச்.ஏ.கிருஷ்ண பிள்ளை

கட்டுரை

**தொழில்கள்**

பெரும்பாலும் ஆசிரியராக பணியாற்றிய கிருஷ்ணபிள்ளை குற்றாலம் அருகே ஒரு காப்பித்தோட்டத்தை உருவாக்கி நடத்தினார். 1890-ல் திருவனந்தபுரம் ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு குலசேகரன் பட்டினம் வந்து உப்பளத்தொழிலில் ஈடுபட்டார்.

**இதழியல்**

எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை சென்னையில் பீட்டர் பெர்சிவல் நடத்தி வந்த தினவர்த்தமானி என்ற இதழின் துணையாசிரியராக பணியாற்றினார்

**இலக்கியப் பங்களிப்பு**

கிருஷ்ண பிள்ளை 'இரட்சணிய யாத்திரிகம்' மட்டுமன்றி வேறு பல அரிய நூல்களையும் இயற்றியுள்ளார். இறைவனைப் புகழும் இனிய தேவாரப் பாடல்கள் அடங்கிய இரட்சணிய மனோகரம் என்னும் நூலையும், போற்றித் திரு அகவல், இரட்சணிய சரிதம் என்னும் செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். அவ்வாறே இலக்கண சூடாமணி என்னும் இலக்கண நூல், பாளையங்கோட்டை எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை கிறித்துவரான வரலாறு என்ற தன் வரலாற்று நூல் ஆகியவற்றை உரைநடையில் படைத்துள்ளார். காவிய தரும சங்கிரகம் என்ற இலக்கியத் தொகுப்பு நூலையும் உருவாக்கியுள்ளார். வேதப்பொருள் அம்மானை, பரத கண்ட புராதனம் ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவர் எழுதியதாகக் கூறப்படும் இரட்சணிய குறள், இரட்சணிய பால போதனை ஆகிய நூல்கள் இப்போது கிடைக்கவில்லை.


**படைப்புகள்**

- இரட்சணிய யாத்திரீகம்
- கிருஷ்ண பிள்ளை எழுதிய நூல்கள்:[2]

திரு அ.வில்சன், இதழாசிரியர்

## படைப்புகள்

- இரட்சணிய யாத்திரீகம்
- கிருஷ்ண பிள்ளை எழுதிய நூல்கள்:[2]


இரட்சணிய யாத்திரிகம்
கடை திறப்புப் படலம்
மூலமும் உரையும்
'தமிழவேள்'
1978

### செய்யுள் நூல்கள்

போற்றித் திருஅகவல் 1884
இரட்சணிய யாத்திரீகம் 1894
இரட்சணிய மனோகரம் 1899

### உரைநடை நூல்கள்

இலக்கண சூடாமணி 1883
நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு 1893
இரட்சணிய சமய நிர்ணயம் 1898

### தொகுப்பு நூல்கள்

காவிய தர்ம சங்கிரகம்
கிடைக்காத நூல்கள்
இரட்சணிய குறள்
இரட்சணிய பாலபோதனை

### பதிப்பித்தவை

வேதப்பொருள் அம்மானை. வேதமாணிக்கம் நாடார் 1860
பரதகண்ட புராதனம் - கால்டுவெல் 1865

### மறைவு

எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை தனது 73-ஆவது வயதில் பிப்ரவரி 3, 1900 அன்று மறைந்தார்.

நாளை

# நமதே

## மனதில்

## வலிமை இருந்தால்

## துன்பமும்

## இன்பமாய் மாறும்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே — முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :
9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com